# மக்கள் மறுவாழ்வு

**மக்கள் மறுவாழ்வு**
**சந்தா விபரம்**
தனிப்பிரதி 75 காசு
ஆண்டு சந்தா ரூ. 10-00
விபரங்களுக்கு:
மக்கள் மறுவாழ்வு
சென்னை-600 094

மலர் 4 ஆவணி-ஆகஸ்டு 1986 விலை 75 காசுகள் இதழ்: 11

## வியாபார - வீட்டுக்கடன் வழங்குவதில் ஊழல்

# நடவடிக்கை எடுத்திடுக!

“மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் தாயகம் திரும்பியோருக்கு அளிக்கப்படும் வியாபாரகடன்-வீட்டுக் கடனுதவியை பெறுவதிலும், வழங்குவதிலும் தொடர்ந்து ஊழல் நடந்து வருகிறது. இதனால் பல்லாயிரக் கணக்கானவர்கள் தமக்குரிய இக் கடனுதவிகளை இழந்து விட்டார்கள். அரசு ஒரு கமிஷனை நியமித்து இந்த ஊழல்களை கண்டு பிடிப்பதோடு உரியவர்களுக்கு முறையாக வியாபார-வீட்டுக் கடனுதவி கிடைக்க வழி செய்ய வேண்டும்.”

இவ்வாறு குடிப் பெயர்ந்தோர் மேம்பாட்டுக்கான சமூக நலச்சங்கம் அரசுக்கு வேண்டுகோள் விடுகிறது.

தாயகம் திரும்பியோர்களுக்கு மறுவாழ்வுத் திட்டத்தின் மூலம் வியாபாரம் செய்வதற்கும் வீடுகள் கட்டிக்கொள்வதற்கும் அரசு கடனுதவி அளித்து வருகிறது.

ஆனால் இடைத் தரகர்களானால், காண்டிராக்ட் காரர்களால் இவ்வுதவிகளை முறையாக பெற முடியவில்லை.

வியாபாரக் கடனில் பெருந்தொகையை கமிஷனாக சுருட்டிக் கொள்கிறார்கள் அல்லது முழுமையாக ஏப்பம் விட்டு விடுகிறார்கள்.

ட்டுக் கடனைப் பொறுத்த வரை பெரிய ஏமாற்றுகளே நடைபெறுகிறது.

வீட்டுக்கடன் பெறும்போது வீட்டு மனை இருக்க வேண்டும் தாயகம் திரும்பியோர்களைப் பொறுத்தவரை இந்த வீட்டு மனைகளை பெற முடிவதில்லை அல்லது அது குறித்து என்னென்ன செய்யவேண்டும் என்றும் தெரிவதில்லை.

இவர்களின் இந்த அறியாமையில் பயன்படுத்திக்கொண்டு இடைத்தரகர்கள்-காண்ட்ராக்டர்கள் மொத்தமாக மலருக்கு வீட்டுமனை எடுத்து இந்த வீட்டுக்கடனை பெற்று வீடுகட்டி கொடுக்க முன்வருகிறார்கள்.

ஆனால் இவர்கள் ஏமாற்றியே விடுகிறார்கள். சில இடங்களில் சென்று பார்த்தால் வீட்டுமனை மட்டுமே இருக்கும். சில இடங்களில் அத்திவாரத்தோடு வீடு கட்டுவது நின்றுபோய் இருக்கும். சில இடங்களில் குட்டிச் சுவர்களோடு நின்று போய் இருக்கும். இப்படி அரையும் குறையுமாக வீடுகள் கட்டப் படுவது போல வீட்டுக் கடனுக்காக வழங்கப்படும் பணம் ஏப்பம் விடபபடுகிறது.

ஒரு தாயகம் திரும்பியோர் எங்கேயோ இருப்பார் வீடு கட்ட ஏற்பாடு நடக்கும். சிலர் வீடுகட்ட குடும்ப அட்டையை கொடுத்திருப்பார்கள். காண்ட்டிராக்டர்களுக்கும் வீடுகட்டப் படுவதாக சொல்வார்கள். ஆனால் அந்த வீடுகளை காட்டமாட்டார்கள் — அது எந்த இடத்தில் எப்படி இருக்கிறது என்பதும் பலருக்கு தெரியாது.

ஒரு தாயகம் திரும்பியவர் தனது குடும்ப அட்டை, கடவுச்சீட்டை காண்ட்டிராக்டர்களிடம் கொடுத்து விட்டால், அவ்வளவுதான். அதன்பின் சம்மந்தப்பட்ட தாயகம் திரும்பியவர் தனக்கு கிடைக்க வேண்டிய உதவிகள் அனைத்தையும் இழந்துவிட்டார் என்பதுதான் பொருள்'

இந்தளவில், ஏதும் தெரியாத அப்பாவித் தாயகம் திரும்பியோர்கள் இடைத்தரகர்கள் காண்டிராக்டர்களின் ஆசை வார்த்தைகளுக்கு நம்பி ஏமாந்து போய் இருக்கிறார்கள்-ஏமாந்துக் கொண்டிருக்கிறார்.

இந்த இடைத்தரகர்களால், காண்டிராக்டர்களால் ஏமாந்து எல்லாம் இழந்து பிச்சைக்காரர்களாக நாடோடிகளாக போன ஆயிரக்கணக்கான தாயகம் திரும்பியோர்கள் இருக்கிறார்கள்

இந்த இடைத்தரகர்கள், காண்ட்ராக்டர்களுக்கு சம்பந்தப்பட்ட அலுவலங்களில் பணி செய்யும் அதிகாரிகள் உத்தியோகத்தர்களே உடந்தையாகவும் இருக்கிறார். தனிப்பட்ட வகையில் கடனுதவிபெற சென்றால் கவனிப்பதில்லை. மேற்படியார்கள் மூலம் சென்றால்தான் எல்லாம் நடக்கும்,

இந்த முறைகேடுகள், ஊழல்கள் குறித்து பல முறை புகார்கள் செய்யப்பட்டும் எந்த விதமான நடவடிக்கையும் இல்லை; மாற்றுத் திட்டமும் இல்லை.

இதனால் தாயகம் திரும்பியோருக்கு கிடைக்கும் மறுவாழ்வு உதவிகள் அவர்களுக்கு கிடைக்காமல் போகிறது.

இந்த ஊழல்களை கண்டு பிடிக்கவும், ஊழல்களுக்கு உடந்தையாக இருக்கும், அதிகாரிகள், இடைத்தரகர்கள், காண்டிராக்டர்கள் முதலானவர்களை தண்டிக்கவும் ஒரு கமிஷன் நியமிக்கப்பட வேண்டும்; இதன் மூலம் உரிய தாயகம் திரும்பியோர்களுக்கு முறையாக உதவிகள் கிடைக்க வழி பிறக்கும் என்று சங்கம் கோரியுள்ளது.

o

**மக்கள் மறுவாழ்வு**

மலர் : 4 ஆவணி 1986 இதழ் : 11

# நாட்டு மக்களுக்கு இன்னும் விடிவில்லை!

இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்து முப்பத்தொன்பது ஆண்டுகளாகின்றன. இந்த சுதந்திரம் இரவில் கிடைத்ததனால்தான் என்னவோ, மக்கள் வாழ்வில் விடிவு பிறந்ததாக தெரியவில்லை.

வெள்ளையரிடமிருந்து விடுபடவேண்டும். சுயாட்சி ஏற்பட வேண்டும். சுபீட்சமாகவும், சுதந்திரமாகவும் சுயமரியாதையாகவும் வாழ வேண்டுமென்று போராடினோம். சுதந்திரமும் பெற்றோம்.

ஆயினும், சுதந்திரமாக இருக்கிறோமா. சுய மரியாதையுடன் வாழ்கிறோமா சுபீட்சமாக இருக்கிறோமா என்றால் விடை பூஜ்யம்தான்.

வெள்ளையர் ஆட்சியின் வாழ வழியில்லாதுபிழைப்புத் தேடி கடல் கடந்து பலர் போனார்கள். நாடு சுதந்திரம் பெற்று பல வருடங்களுக்கு பின் திரும்புகிற அவர்கள், அதைவிட மோசமான நிலைமைக்குத்தான் முகம் கொடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள். வாழ்வைத்தேடி நாடோடிகளாக அலையும் நிலைமை; சுதந்திர இந்தியாவில் வாழ்வுக்கு வழி தேடி இன்னமும் கடல் கடந்து போகும் நிலைமைதான்,

சுய தேவையைப் பூர்த்தி செய்துக் கொண்டு வாழ்ந்த கிராமப்புறத்து மக்கள் வாழ வழி இல்லாதவர்களாகி விட்டார்கள்; மழையில்லை; வரட்சி; பாசன கிணறுகளும், ஏரிகளும், ஆறுகளும் வரண்டுப் போய் விட்டன-தண்ணீர் பெருக்கெடுத்தோட வேண்டிய காவிரி முதலான ஆறுகளில் மணல் ஏற்றும் லாரிகள் ஓடிக் கொண்டிருக்கின்றன.

—ஆண்டாண்டுகளாக வாழும், சொந்த கிராமங்களை விட்டு வெளியேறும் அவலம். வேலைத் தேடி நகரங்களுக்கு சென்று நடை பாதைகளில் வாழும் கொடுமை.

நாட்டு மக்களில் பெரும்பான்மையோர் வறுமைக் கோட்டிற்கு கீழேயே இருக்கிறார்கள். வாழ்வுக்கேற்ற வருமானம் இல்லை. வாய்ப்பில்லை. வசதியில்லை விலைவாசி விஷம்போல் ஏறுகிறது. விலைவாசி உயர்வுக்கும். வருமானத்தின் பற்றாக்குறைக்கும் தக்கபடி எதையும் வாங்கி வாழும் சக்தி இல்லாதவர்களாக இருக்கிறார்கள்.

சமூக அமைதி நிலை குலைந்து நிற்கிறது. சமூகங்களுக்கிடையில் சமூக நிலை, பாஸ்பர உறவுகளில்லை. சாதிய சண்டைகள், சமய பூசல்கள், தீண்டாமை, மொழித்தகராறுகள் கொடிக்கட்டி பறக்கின்றன. இத்தீமைகளால் கொலை, கொள்ளை, தீ வைப்பு போன்ற கொடுமைகள். இந்த கொடுமைகளால் உயிர் இழந்தும் உடைமை இழந்தும் அகதிகளாகி நிற்கும் பரிதாப நிலைமைகள்.

இவற்றிற்கெல்லாம் மகிடமிட்டாற்போல இருப்பது அரசியல். அதாவது கட்சி அரசியல். இந்த அரசியல் நாட்டின் - நாட்டு மக்களின் நலன் குறித்து சிந்திக்கும் சமூக அரசியலல்ல; மக்களின் வறுமையையோ வாங்கும் சக்தியின்மையையோ, கிராமப்புரத்து விவசாயிகள் வரட்சியில் வாடும் நிலைமைகளையோ, சாதி, சமய பூசல்கள் குறித்தோ, அதனால் பழியாகும் மக்கள் பிரச்சனைக் குறித்தோ கவலைப்படுவதில்லை.

தனி மனித வழிபாடு. பதவி, அதிகாரம் இவற்றிற்காகவே தனது காலத்தையும் நேரத்தையும் செலவிடும் கட்சி அரசியலே நாட்டு மக்களின் பிரச்சனைகளையும் துயரங்களையும் வளர்த்து வந்திருக்கிறது. இதன் மூலம் மக்கள் தங்கள் சுதந்திரத்தையும். சுயமரியாதையும், சுபீட்சமான வாழ்வுக்கான வழிகளையும் இழந்து நிம்மதியின்றியே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இதனால் சட்டம். ஒழுங்கு கெட்டதோடு மட்டுமல்லாது எங்கும் எதிலும், லஞ்சமும் ஊழலும் மலிந்து கிடக்கின்றன. லஞ்சம் கொடுக்காமல், சிபார்சுக்கு ஆள் பிடிக்காமல் எதையும் சாதிக்க முடியாமல் நிலைமையே.

அரசு வறுமைக் கோட்டிற்கு கீழ் நலிந்து நிற்கும் மக்களுக்காக எத்தனையோ திட்டங்களை வகுத்து உதவுகின்ற ஏற்பாடுகளை செய்திருந்தாலும் இந்த கட்சி அரசியலைச் சார்ந்த அரசியல்வாதிகளால்-அவர்களுக்கு ஆளவட்டம் பிடிப்பவர்களால் அவை மக்களுக்கு போய் கிடைப்பதில்லை - அவற்றை இவர்களே பங்கு போட்டுக் கொள்ளும் அக்கிரமங்கள்; அநியாயங்கள்.

ஆக வெள்ளையர்களிடம் இருந்து சுதந்திரம்பெற்ற நாம் சமூக, அரசியல், பொருளாதார பிரச்சனைகளிடமிருந்து சுதந்திரம் பெறவில்லை. அவற்றிற்கெல்லாம் மூல வித்தாக இருக்கிற அதிகார - ஆளும் வர்க்கத்திடமிருந்து, கட்சி அரசியல் பூசகர்களிடம் இருந்து விடுதலை பெறவே இல்லை - இன்னும் நாட்டு மக்களுக்கு விடிவே பிறக்க வில்லை என்பதை உணர வேண்டும்.

## கொடைக்கானலில் தாயகம் திரும்பியோர்:

# கொத்தடிமைகளாகவே இருக்கிறார்களென கமிஷன் முடிவு!

கொடைக்கானலில் தமிழர்கள் கொத்தடிமைகளாக நடத்தப்பட்டது உண்மை என்று விசாரணைக் கமிஷன் தாக்கல் செய்து உள்ள அறிக்கையில் கூறியுள்ளது.

கொடைக்கானல் கூப்புகளில் பணியாற்றும் தாயகம் திரும்பிய தமிழர்கள் கொத்தடிமைகளாக நடத்தப் பட்டார்கள்.

இதுபற்றி விசாரிக்க நீதிபதி சி.ஜே.ஆர். புசல், ஐ.ஏ.எஸ். அதிகாரி டி. எஸ். சங்கரன் சமூகநல சேவையாளர் ஏ. மக்பூப் பட்சா ஆகியோர் கொண்ட கமிஷன் சுப்ரீம் கோர்ட்டுக்கு அறிக்கை அனுப்பியது.

## கொத்தடிமைகளே

அந்த அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:

என். எம். இ கூப்பில் காண்டிராக்டர்களிடம் வேலை பார்க்கும் தாயகம் திரும்பிய குடும்பங்களும் கொத்தடிமைகளாக நடத்தப்படுகின்றனர்.

22 பீட்கூப்புகளிலும் பாரி கோம்பை கூப்பிலும் வேலை செய்யும் ஒவ்வொரு தொழிலாளரையும் நாங்கள் விசாரிக்கவில்லை.

ஆயினும் இந்த 2 கூப்புகளிலும் கொத்தடிமை நிலைமை இருக்கிறது என்பதை நாங்கள் உணர்ந்து கொள்ள முடிந்தது

மரங்களை வெட்டுதல் பட்டை உரித்தல் போன்ற வேலைகள் செய்யும் தாயகம் திரும்பியோருக்கு பல அரசியல் சட்ட உரிமைகள் மறுக்கப்பட்டு இருக்கின்றன.

## காண்ட்ராக்ட் முறைகள்

இந்த வேலையில் காண்ட்ராக்ட் முறையை உடனே ஒழித்துக்கட்ட வேண்டும். ஏன் என்றால் தொழிலாளர்களுக்கு அநீதிகள் இழைக்கப்பட்டதற்கு இந்த காண்ட்ராக்ட் முறைகள்தான் காரணம்.

எனவே காண்ட்ராக்ட்முறை எவ்வளவு விரைவில் ஒழிக்கப் படுகிறதோ அதற்கு ஏற்ப இந்த கூப்புகளில் வேலை செய்யும் தொழிலாளர்களின் வேலை நிலைமையும், வாழ்க்கைத் தரமும் உயரும்.

கூப்புகளில் வேலை பார்க்கும் அடிமைகள் அல்ல. அவர்கள் வேலையை விட்டுச்செல்ல தடை இல்லை என்று காண்டிராக்ட் நிறுவனங்கள் மறுப்பு வெளியிட்டு இருப்பது ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல.

காண்ட்ராக்ட் நிறுவனங்களின் மறுப்பு சரி அல்ல என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன.

## வெளியேற முடியாது

1985-ம் ஆண்டு நவம்பர் மாதம் 29-ம் தேதி மேஸ்திரிக்கு நிர்வாகம் ஒரு குறிப்பு (சீட்டு) அனுப்பி உள்ளது.

வேலையை விட்டு செல்ல விரும்பிய ஒரு தொழிலாளி கம்பெனியிடம் பட்ட கடனை தீர்த்து விட்டுத்தான் வெளியேறவேண்டும் என்று அந்த சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது

அந்த தொழிலாளியின் சம்பளத்தையும் அவருக்கு அறிவிக்கப்பட்ட அரிசி ரம்பம் போர்வைகள் துணிகள் ஆகியவற்றின் விலையை கணக்கிட வேண்டும். கணக்குகளை கம்பெனிகள் சரிபார்த்துதீர்த்த பிறகுதான் அந்த தொழிலாளி அவரது உடைமைகளை எடுத்துக்கொண்டு வெளியேறலாம் என்றும் அந்த குறிப்பில் கூறப்பட்டு இருந்தது.

## லட்சக்கணக்கில் லாபம்

காண்ட்ராக்ட் நிறுவனத்தின் வரவு செலவு 30 லட்சம் ரூபாய் ஆனால் கணக்கு புத்தகங்கள் எதையும் நிறுவனம் கமிஷனிடம் காட்ட வில்லை. சில துண்டு காகிதங்கள் மட்டும் காட்டப்பட்டன.

தங்களுக்குப் பாதகமான நிலை ஏற்படலாம் என்ற தயக்கம்தான் கணக்குபுத்தகங்களை காட்டாததற்கு காரணமாகும்.

## உதவி கலெக்டர் நடவடிக்கை

கொடைக்கானல் உதவிக் கலெக்டர் குர்னிகால் சிங்கை கொத்தடிமை முறை ஒழிப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கும்படி மாவட்ட மாஜிஸ்திரேட்டுமான தான் நியமிக்கவில்லை என்றும் உதவிகலெக்டர் நடவடிக்கை எடுத்தது சரி அல்ல என்றும் அண்ணா மாவட்ட கலெக்டர் மாதவன் நம்பியார் கூறி இருக்கிறார் இதை ஏற்பதற்கு இல்லை.

கொத்தடிமை சட்டத்தின் கீழ் அடிமை தொழிலாளரை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதற்கு மாவட்ட மாஜிஸ்திரேட்டுக்கு அதிகாரம் வழங்கும் தமிழ் நாடு அரசின் அறிவிப்பு எதுவும் காணப்படவில்லை.

## 20 அம்ச திட்டத்தில்

ஆனால் கொத்தடிமை ஒழிப்புச் சட்டம் இயற்றப்பட்டு 20 ஆண்டு ஆகிறது 20 அம்ச திட்டத்தின் ஒரு முக்கிய அம்சம் கொத்தடிமை ஒழிப்பு ஆகும்.

ஆயினும் அரசு உத்தரவு பற்றியவை எதுவும் காணப்படாததால் அவ்வாறு அரசு உத்தரவு வெளியிடப்படவில்லை என்று முடிவுகட்ட இயலாது.

எனவே உதவி கலெக்டர் குர்னிகால்சிங் நடவடிக்கை சட்டத்துக்கு புறம்பானது அல்ல.

மேற்கண்டவாறு 3 நபர் கமிஷனர் அறிக்கையில் கூறப்பட்டுஉள்ளது.

## விரிவான ஆய்வு

சுபரீம் கோர்ட்டு கமிஷனின் உத்தரவின் பேரில் ஆர். வித்யாசாகர், அலோசியஸ் இருதயம் எம். தேவதாஸ் ஆகிய சமூக நல தொண்டர்கள் கொண்ட மற்றொரு குழுவும் அமைக்கப்பட்டது.

இந்தக்குழுவினர் கொடைக்கானல்மலை தொடர்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் நிலைமை பற்றி விரிவான சர்வே நடத்தி ஏராளமான விவரங்களை திரட்டி இருக்கிறது.

டான் இந்தியா, இந்தியா விஸ்கோஸ் ஆகிய நிறுவனங்கள் நிர்வகிக்கும் கூப்புகளில் 251 குடும்பங்களைச் சேர்ந்த 633 தொழிலாளர்கள்) 362 ஆண்கள் 271 பெண்கள் கொத்தடிமைகளாக இருப்பதாக இந்த குழு நிர்ணயித்து இருக்கிறது.

இந்த குழு கூறி இருப்பதாவது,-

அரசு நிர்ணயித்த ஊதியத்துக்கும் குறைவாக சம்பளம் இல்லாமல் வேலை வாங்குதல் போன்ற முறைகேடுகள் உள்ளன

திருமணங்கள் நடத்தக் கூட கட்டுப்பாடுகள் உள்ளன் காண்ட்ராக்டர்கள் அங்கீகரித்த நாட்களில் தான் திரும

(4-ம் பக்கம் பார்க்க)

# கர்னாடக ரப்பர் தோட்டத்தில் பல கோரிக்கைகளை வைத்துபோராட்டம்!

கர்னாடக பாரஸ்ட் பிளாண்டேசன் கார்ப்பரேசனுக்குச் சொந்தமான ரப்பர் தோட்டங்களில் பணி செய்யும் தாயகம் திரும்பிய தொழிலாளர்கள் பல்வேறு பட்ட கோரிக்கைகளை முன் வைத்து அடையாள வேலைநிறுத்தம், குறைந்த உற்பத்தியில் ஈடுபடுத்தல் போன்ற போராட்டத்தில் குதித்துள்ளனர்.

கீழ்கண்ட கோரிக்கைகளை வைத்து போராடி வருகின்றனர்.

எடுத்த மொத்த சம்பளத்திற்கு போனஸ் கிடைக்க வேண்டும்.

வேலையிலிருந்து ஓய்வு பெறுபவர் நியமனம் செய்யும் நபருக்கு நிர்வாகம் அவரது வேலையை கொடுக்க வேண்டும்.

தோட்டத்தில் தொழில் புரியும் தொழிலாளர்களின் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்த பிறகு மற்றவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும்.

பிளான்டேசனில் பதிவு செய்யும் டி. ஆர். சி. எக்காரணத்தையும் கொண்டும் குறைக்கக் கூடாது.

மூன்று- கிலோ மீட்டர் அல்லது அதற்கு மேல் நடந்து சென்று பால் வெட்டி பாலை சேகரித்து சுமந்து வரும் தொழிலாளர்களுக்கு நடை செலவு கொடுக்க வேண்டும்.

நிர்வாகத்தால் திணிக்கப்பட்ட 'மினிமம்' தொழிலாளர்களுக்கு மிகவும் கஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே 'மினிமம்' உடனடியாக குறைக்கப்பட்டு சீராக்கப் படவேண்டும்.

பிராவிடெண்ட் பண்ட் (பாரம் எண் 23) பிடித்தம் செய்த அத்தாட்சி சிலிப் உடனடியாக வினியோகிக்கப்பட வேண்டும்.

அனைத்து காலனிகளுக்கும் மின்சாரவசதி செய்து தரப்பட வேண்டும்.

மின்சாரம் வழங்கப்பட்ட காலனிகளுக்கு தனித்தனியாக மீட்டர் பொறுத்தும் வரை மின்சார தொகையை நிர்வாகம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு வயது வரம்பின்றி பாடசாலை புத்தக செலவு கொடுக்கப்பட வேண்டும்.

சூப்பர்வைசர், டிரைவர் குமாஸ்தா ஏனைய வேலைகள் கே. எப். பி. சி. நிர்வாகத்தில் இருந்தால் தொழிலாளர்களின் தகுதியுள்ள பிள்ளைகளுக்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டும்.

மருத்துவமனையில் போதிய வசதி இல்லை, சரியானமுறையில் மருத்துவ வசதி செய்து, போதுமான மருந்து வகைகளும் வினியோகிக்க வழி செய்து, கூடுதலாக டாக்டர் ஒருவரும் நியமிக்க வேண்டும்.

அனைத்து காலனிகளுக்கும் குடிநீர் செதி செய்து தரப்படவேண்டும்.

தற்போதுள்ள ஆயாக்களுக்கு அதிக சம்பளம் மற்றும் யூனிபாரம் கொடுக்கப்பட வேண்டும்.

ஃபயர் வாச்சர்களுக்கு கொடுக்கப்படும் 300.00 ரூபாய் சம்பளம் அநியாயமான குறைவு; அவர்களுக்கு நியாயமான அதிக சம்பளம் கொடுக்கப்படவேண்டும்.

கர்னாடக பாராஸ்ட்பிளாண்டேசன் கார்ப்பரேசனின் ரப்பர் தோட்டத்தில் 926 தாயகம் திரும்பிய குடும்பங்கள் பணி செய்கிறார்கள். சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் தாயகப் திரும்புவோர்களுக்கேஇந்த ரப்பர் தோட்டங்களில் வேலை வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளது. கர்னாடக மாநிலத்தில் தென் கன்னடம், சுள்ளியா, புத்தூர் மாவட்டங்களில் இத் தோட்டங்கள் இருக்கின்றன.

இவர்கள் மத்தியில் பல தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. ஜெனரல் ஒர்க்கர்ஸ் யூனியனைச் சேர்ந்த தொழிலாளர்களே இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## காலனிக்கு உதவி

புதுக்கோட்டை மாவட்ட முருகராஜ் காலனியில் நீண்ட காலம் கீத்துவீடுகளாக இருந்த 32 வீடுகளுக்கு யூ. எப். எப். ஆர். ஓடுகள் போட்டுக்கொடுத்திருப்பதாக, மேற்படி அமைப்பின் புதுக்கோட்டை பிரதிநிதி கதிரேசன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இங்கு கைத்தறி நூற்பு நிலையம் அமைக்கப்பட்டு, காலனி பெண்களுக்கு காதி போர்டு மூலம் வேலை வாய்ப்புக்கள் அளித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

கல்லூர், மேட்டுப்பட்டி, திருவரங்குளம், கலிபுல்லா, முருகராஜ் ஆகிய காலனிகளில் பால்வாடி அமைத்து ஆசிரியைகளும் செவிலித்தாய்களையும் நியமித்துள்ளதோடு, சில காலனிகளுக்கு குடிநீர் வசதியும் ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ணத்தில் கலந்து கொள்ளலாம் என்ற கட்டுப்பாடும் உண்டு.

இறந்தவர்களுக்கு முறையான தகனச் சடங்குகள் நடத்த அனுமதிக்கப்படுவது இல்லை அவசர அவசரமாக உடல்கள் புதைக்கப்படுகின்றன.

மரங்களில் பட்டை உரித்தல் வெட்டுதல் போன்ற வேலைகளை காண்ட்ராக்ட்டுக்கு விடுவதை ரத்து செய்து விட்டு தொழிலாளர் கூட்டுறவுகளிடம் ஒப்படைக்க வேண்டும்.

மேற்கண்டவாறு குழு கூறி உள்ளது,

இலங்கை தமிழர்களுக்கு ஏற்பட்ட துன்பங்கள்மற்றும் அவர்களின் நிலைமையை சித்தரித்துக்காட்டும் விவரமான அறிக்கை தமிழக அரசு பரிசீலிப்பதற்கு உரியது என்று சுப்ரீம் கோர்ட்டு சிபாரிசு செய்து உள்ளது. 0

## கடைகள் கிடைக்குமா?

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு தமிழ் நாட்டில் பல நகரங்களில் அரசு குறைந்த வாடகைக்குகடைகள் (மார்க்கட்)கட்டிக் கொடுத்துள்ளது.

ஆனால், நாங்கள் வாழும் கூடலூரில் இவ்வாறான ஏற்பாடு ஏதும் இல்லை.

தற்போது கூடலூரில் கள்ளிக்கோட்டைக்கு செல்லும் சந்திப்பில் (பழைய பஸ் நிலையம்) அருகே 60 கடைகளைக் கட்டி முடிக்க பேரூராட்சி ஏற்பாடு செய்துள்ளது. அரசும் அதற்கு பணம் ஒதுக்கியுள்ளது. இக் கடைகளில் தாயகம் திரும்பியோருக்கு அரசு அளிக்க முயற்சி மேற்கொண்டுள்ளோம் எங்களுக்கு கிடைக்குமா ?

-வ.ஆ. நடராசா
கூடலூர் - நீலகிரி

## உதவிகள் இல்லை

எங்கள் முகாமில் 11குடும்பங்கள் உள்ளன. மொத்தம் 50 நபர்கள் தான் உள்ளார்கள், இங்குள்ளவர்களுக்குஉதவிகள் கிடைப்பது குறைவு உணவு பொருட்களுக்கு மிகவும் கஷ்டமாக உள்ளது எல்லாமுகாமிலும் கூடியளவு உதவிகள் செய்கிறார்கள் எங்கள் முகாமில் சிறிதளவு கூட உதவி இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறோம். வைத்திய வசதிகள் இல்லை. மருத்துவர்கள் யாரும் வந்து பார்ப்பதில்லை. எங்களுக்கு ஏதும் உதவிகள் கிடைக்குமா ?

இலங்கை அகதிகள்
அகதிகள் முகாம்
ஆலம்பாக்கம்
கடலூர்.

# 12 வருடங்களாகியும் கடனுதவி கிடைக்கவில்லை !

இலங்கையிலிருந்து குடும்பத்துடன் தாயகம் திரும்பிய நான் 7-10 84 அன்று மண்டபம் முகாமில் ரூபா 2000 கடன் உதவிப் பெற்றேன். அதன் பின்னர் புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி வட்டத்திலுள்ள எனது சொந்த ஊரான வெள்ள கொல்லை கிராமத்தில் குடியேறினேன்.

எனது வீட்டுக் கடனுக்காக 1975ம் ஆண்டு மனு செய்தேன். நான் நேரடியாக விசாரணை செய்யப் பட்டதோடு, எனது குடும்ப அட்டையையும ஒப்படைத்தேன் ஆனால் அந்தவேளையில் எனது கடன் கட்டு மண்டப முகாமிலிருந்து மாவட்ட ஆட்சியாளருக்கு வந்து சேராததால் அது வந்து சேரும் வரை காத்திருக்கும் படி கேட்டுக்கொள்ளப்பட்டேன்.

பின்னர் மண்டப முகாமிலிருந்து எனதுகடன் கட்டுவராத வேளையிலேயே, அலுவலக குமாஸ்தா ஹனிப்பா என்பவரால் எனது மனு (சீ எல். ஏ. 119/75-76) குடும்ப அட்டையின் ஆதாரத்துடன் பரிசீலிக்கப்பட்டு கடன் வழங்க அனுமதிக்கப்பட்டது.

பின்னர், பல முறை நான் மாவட்ட ஆட்சி அலுவலகத்திற்கு சென்று பார்த்தேன். மறுவாழ்வு இயக்குனருக்கும் விண்ணப்பம் செய்துக்கொண்டேன் நான் எழுதியகடிதத்திற்கு மறுவாழ்வுத்துறை இயக்கத்திலிருந்து 21-1-76யில் ஒரு கடிதம் (ஓ எம்யூ டீ 730/76) வந்தது. அதன் பின்னால் இதுவரை எனது கடன் குறித்து எந்தவித முடிவும் ஏற்படவில்லை.

எனது கடன் கட்டும், கடவுச்சீட்டும் தவறுதலாக மண்டபமுகாமிலிருந்து தஞ்சாவூர் ஆட்சியாளர் அலுவலகத்திற்கு அனுப்பப் பட்டிருந்தது அது 1982 ஜூலை மாதத்தில்தான் தனித்துணைத் கலைக்டருக்கு திருப்பி அனுப்பப் பட்டது, அறந்தாங்கி கோட்ட வருவாய்த்துறை அலுவலகத்தின் 27-7-1982ந்தேதி (கடித எண் ஆர்ஓ8214/82) அதேவேளையில், நான் மனு செய்துக் கொண்ட கடன் கட்டோ. குடும்ப அட்டையோ ஆட்சியாளர் அலுவலக மறுவாழ்வுப் பகுதியில் இல்லை என்று தெரிவித்து விட்டார்கள்.

பின்னர் நான் மறுவாழ்வுத் துறை இயக்குனருக்கு மனு செய்தேன். அதன் பேரில் விசாரணை செய்யும் படி மாவட்ட அலுவலர்க்கு உத்தர விட்டார். புதுக்கோட்டைதனித்துணை ஆட்சியாளர் திரு முகமது அப்துல் அசீஸ் அவர்கள் விசாரணை செய்து (அவரது கடிதம் 5-3 83) எனது புதிய புகைப் படம் ஒன்றும், ரூபா 2.50க்கு பெறுமதியான பத்திரமும் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்




கொண்டார். புதிய குடும்ப அட்டை வழங்குவதற்கு மேற்படி ஆவணங்கள் மறுவாழ்வுத்துறை இயக்குனரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டது.

மீண்டும் தனித்துணை ஆட்சியாளரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டேன், ஆனால் கடைசியாக செய்துக் கொள்ளப்பட்ட மனுவுக்கு எந்தவிதமான பதிலும் அளிக்கப்படாமல் எனது குடும்ப அட்டை வழங்கப் பட்டதற்கான எந்த ஆதாரமும் இல்லை என்று கடன் மறுக்கப்பட்டு விட்டது.

ஆச்சரியமாகவும், அதிர்ச்சியாகவும் இருக்கிறது. கடனுதவிக்கு மனு செய்யும் போதோ, குடும்ப அட்டை, கடவுச்சீட்டு போன்றவற்றை அலுவலகங்களில் சமர்ப்பிக்கும் போதோ எந்தவிதமான சான்றிதழ்களும் வழங்கப் படுவதில்லை. நான் எந்த வகையில் நிரூபிக்க முடியும்? நான் இந்தியா வந்து உரிய காலத்தில் மனு செய்து ஒன்பது வருடமாகியும் என் மனு குறித்து எந்த முடிவும் எடுக்கப்பட வில்லை என்பதோடு, சம்பந்தப்பட்ட எந்த ஆவணங்களும் இல்லை- கண்டுப்பிடிக்க முடியவில்லை.

நான் 1975யிலேயே வீட்டுக்கடனுக்கு மனு செய்து விட்டேன்; ஆனால் மண்டப முகாமிலிருந்து வரவேண்டிய கடன் கட்டு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் வந்து சேரவில்லை.

ஆறு ஆண்டுகளுக்குப் பின் 1983யில் அது ஆட்சியாளர் அலுவலகத்திற்கு வந்து சேர்ந்தது.

அது வந்து சேர்ந்து விசாரணை செய்யப்பட்ட போது, 1975யில் நான் செய்துக் கொண்ட மனு, சமர்ப்பித்த குடும்ப அட்டை அடங்கிய ஆவணங்கள் காண வில்லை. கண்டேபிடிக்க முடியவில்லை.

அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படும், ஆவணங்களுக்கு எந்த சான்றிதமும் வழங்கப்படுவதில்லை.

1983யில் மறுவாழ்வு இயக்குனரில் உத்தரவுக்கு இணங்க தனித் துணைக் ஆட்சியாளரால் விசாரணை செய்யப் பட்டேன். அவர் கோரியப் படி. புதிய புகைப் படம் ஒன்றும் ரூபா 2/50 பெறுமதியான பத்திரமொன்றும் சமர்ப்பித்தேன்.

ஆனால் கடனுதவி மறுக்கப் பட்டு விட்டது. என்னிடம் எந்த தவறுகளும் இல்லை. சம்பந்தப்பட்ட அலுவலகத்தவர்களே காரணமாகும்

ஐயா! என்னுடைய கடனுதவிக்கு மட்டும் இந்த கதியல்ல பல ஆயிரம் பேர்களுடைய கடன்களும் இதே கதிதான், மனு செய்து பல வருடங்களாகியும் கடனுதவி கிடைக்கவில்லை. அர்த்தமற்ற காரணங்களால் நிராகரிக்கப் படுகிறது. பலருடைய கடன் கட்டுகள் இல்லை. இதனால் சம்பந்தப்பட்ட பல மனுதாரர்கள் மிகவும் அவதிக்குள்ளாகி இருக்கிறார்கள்.

அதிகாரிகள் தங்கள் பைகளை நிரப்புவதிலேயே குறியாக இருக்கிறார்கள். இடைக்தரகர்கள், கான்டிராக்ட் காரர்களோடு கை கோர்த்துக் கொண்டு தனிப்பட்டவர்களின் கடன் மனுக்களை பரிசீலிப்பதில்லை-இவர்கள் விஷயத்தில் பலதரப்பட்ட ஊழல்களைச் செய்து வருகிறார்கள்.

எனது கடன் பெறுவதற்கு எவ்வளவு முயற்சிகள் எடுத்தும் கிடைக்கவில்லை. மறுவாழ்வுத்துறை அலுவலகர்களால் எந்த பரிவும் கிடைக்கப் போவதாக தெரிய வில்லை. சட்ட உதவியை நாடும் நிலையே இருக்கிறேன்.

-பி. சிவசாமி

வெள்ளக்கொல்லை கிராமம்
ஆரயபட்டி
ஆலங்குடி
புதுக்கோட்டை வட்டம்

---

'எங்கள் பிரச்சனைக'ளுக்கு பிரச்சனைகளை எழுதுவோர் மிகத் தெளிவாகவும், விளக்கமாகவும் எழுதுவதோடு - இரண்டு பிரதிகளாக எழுதி அனுப்ப வேண்டுகிறோம்.

— ஆசிரியர்

# புதிய கல்வி கொள்கை:

# இன்றைய கல்வி

புதிய கல்விக் கொள்கை கடந்த கல்வி ஆண்டில் கல்லூரிகளிலிருந்து கடைத் தெருவரை விவாதிக்கப்பட்ட ஒரு விஷயம்

தங்களை மேதைகளாக கற்பனை செய்துக் கொண்டவர்கள் பலரும் உண்மையான மேதைகளாக இருந்தவர்கள் சிலரும் சேர்ந்து கருத்தரங்கு, மாநாடு என்று திருவிழா காலாட்டாவே செய்துவிட்டனர்

இந் நாட்டில் கல்விமுறையே மாறி எல்லோருக்கும் அறிவு பெருக்கெடுக்க போகிறது என்று பலரும் நம்பினர்.

திட்டம் அறிவிக்கப் பட்டது கடல் பார்க்க ஆசைப் பட்டவனுக்கு கடலையே காண்பித்தால்... ஆனால் சொத்தை கடலை"யை காண்பித்தால் எப்படி இருக்குமோ அப்படி ஆகி விட்டது பலருக்கு.

நான் என் வாழ்க்கையை ஆசிரியனாக ஆரம்பித்தவன் முதலாம் வகுப்பு முதல் உயர் கல்வி வரை போதிக்கின்ற ஒரு வாய்ப்பை பெற்றவன் ஓர்பத்திரிகை விமர்சகனைப் போலில்லாமல், இப்பிரச்சனை நோக்கி அலசிப்பார்க்க விரும்புகிறேன் புதிய கல்விக் கொள்கையைப் பற்றி ஓரிரு கருத்துகளைச் சொல்லி விட்டு, மாறுதலில் முற்றிலும் மறக்கப் பட்டவைப் பற்றி எழுதுகிறேன்,

புதிய கல்விக் கொள்கையின் மிகப்பெரிய சிறப்பம்சமாக சொல்லியிருப்பது 'மாதிரிப்பள்ளிகள்' பற்றியது கல்வி மாவட்டங்கள் எல்லாவற்றிலும் ஒவ்வொரு 'மாதிரிப்பள்ளி' அமைக்கப்படும்; அதற்கு ஒரு கோடி (ஒவ்வொரு பள்ளிக்கும்) செலவாகும். உறையுள் பள்ளிகளாக (Residential Schools) இருக்கும் இதில் போதனா மொழி ஆங்கிலம். ஹிந்தி தனி முக்கியத்துவம் பெறும்.

இரண்டாவது சிறப்பம்சம், நாடு முழுவதும் தொழிற் கல்விக்கு முக்கியத்துவம் தரப்படும் வேறு பெரிதான அம்சங்கள் எதுவும் இருப்பதாக அடியேனுக்கு தெரியவில்லை. ஆனால் கல்விப் பிரச்சனை இருக்கிறதே. அது சாதாரணமானதல்ல அவற்றை பார்ப்போம்-

## இன்றைய பள்ளிகளின் நிலைமை

ஏதாவது ஒரு கிராமத்துக்குள் நுழைந்துப் பார்ப்போமே. ஊரின் ஒதுக்குப்புறமாக இன்றைக்கோ நாளைக்கோ என்று நாட்களை எண்ணிக்கொண்டிருக்கும் கட்டிடம் தென் படுகிறதா? அதை நெருங்க நெருங்க மூக்கில் சிறு நீர் நெடி ஏறுகிறதா? அது தான் கிராமத்திலுள்ள பாடசாலையாக இருக்கும்.

ஆமாம் நம்முடைய நாட்டில் 40 ஆயிரம் தொடக்கப் பள்ளிகளின் கட்டிடங்களோ

---

**இக்கட்டுரையாளர் ஒரு எம்.எஸ்ஸி. பட்டதாரி. இவர் பல கல்வி நிறுவனங்களில் ஆசியராக இருந்து பெற்ற பல அனுபவங்களை கொண்டு புதிய கல்விக் கொள்கையை அலசுகிறார்.**

---

இல்லை. 2 இலட்சம் பள்ளிகளின் கட்டிடங்கள் இன்று விழுந்து விடுமோ நாளை விழுந்து விடுமோ என்று இருக்கின்றன. 60 ஆயிரம் பள்ளிகள் ஓராசிரியர் பள்ளிகள். இரண்டு இலட்சம் பள்ளிகளில் கரும்பலகைகளே இல்லை (இல்லாவிட்டால் என்ன? சுவரில் கரித்துண்டில் எழுதியே கிராமத்து சுடான செய்திகளை பொறுப்புள்ள பலர் மக்களுக்கு தெரிவிப்பது இல்லையா?)

கல்லூரிகள் இருக்கின்றனவே, இவை கொஞ்சம் பரவா இல்லை. நூலகங்கள் இருக்கும் ஆய்வகங்கள் இருக்கும். நூலகத்திற்கு தேவையான புத்தகங்கள் இருப்பதாக கோப்புகள் கூறும். பல புத்தகங்கள் வள்ளுவர் காலத்து செல்லரித்த-உடைந்த ஓலைச் சுவடிகளை நினைவூட்டும். முக்கிய புத்தகங்களை எப்போது கேட்டாலும் யாராவது எடுத்து போய் இருப்பதாக கூறுவார்கள் பையன் தப்பித்தவறி புத்தகத்தை பார்த்து விடப்போகிறான் என்று ஆசிரியர்கள் பத்திரமாக தங்கள் வீட்டிற்கு எடுத்து சென்றிருப்பார்கள்- இப்படி குறைபாடுகள் சொல்லி மாளாது.

தனியார் பள்ளிகளை எடுத்துக் கொண்டால் நிலைமைகள் மிகவும் கொடூரம் தான். பள்ளியில் சேர பத்தாயிரம் நன்கொடை. விலக ஐயாயிரம் எனப் பிக்கல் பிடுங்கல்கள். இப்பள்ளிகளின் கல்வித் தரத்தை ஆசிரியர்களுடைய நிலைமையை நான் விளக்கும் போது புரிந்துக் கொள்ளலாம்.

பல பள்ளிகளில் கழிப்பிட வசதிகள் கூட இல்லை. சென்னைப் போன்ற நகர்களில் ஒரு பெரியகூரைவீடுதென்பட்டால் அதுகண்டிப்பாக ஒரு தனியார் ஆங்கிலப் பள்ளியாகத்தான் இருக்கும்

சமீபகாலமாக கல்வியின் தரத்தை உயர்த்த சுய நிதி கல்லூரிகள், முக்கியமாக தொழிற் கல்லூரிகள் இந் நாட்டிலே உருவாகி உள்ளன. மக்களுக்கு சேவை செய்யவே பிறப்பெடுத்த பல செல்வந்தர்களின் சேவை இது. ஆய்வகங்களோ செய்முறை பயிற்சிக்கென தொழிலகங்களே இங்கு இல்லை.

## மாணவர்கள் நிலைமை

சூழ்நிலையின் உருவாக்கம் மனிதன். சூழ்நிலை ஒரு மனிதனை முட்டாளாகவும் மாற்றும் மாமேதையாகவும் உருவாக்கும் இந்தியாவின் சாதாரண மாணவனின் நிலைமை என்ன? பட்டினியின் கொடுமையில் வாழும் அவனால் ஆழ்ந்து கல்வி கற்க முடியுமா?

வறுமையின் கோரப்பிடியில் நாட்டில் பாதிக்கு மேற்பட்டோர் உள்ள போது வளமான கல்வி பெறுவது சாத்தியமா?

பின் தங்கிய நிலையிலிருக்கும்-கீழ் மட்டத்தில் இருக்கும் ஒருவன் தப்பித்தவறி கல்லூரிக்கு வந்து விட்டால் அவன் தனது வசதியின்மையை நினைத்து நொந்துக் கொள்ளத் தான் நேரமிருக்கும். அவனை போல உடைஉடுத்த முடியாதா என்று வசதியுள்ளவனை பார்த்து ஏங்கும் பல புத்திசாலி மாணவர்களை நான் கண்டிக்கிறேன். ஷூ போன்ற காலணி விசயம்- இது கூட கிராமத்தில் இருந்து கல்லூரிக்கு வருபவனுக்கு எட்டாக் கனியாக இருக்கிறது தன்றாக உடை உடுத்தி நல்ல காலணிகளை அணிபவனை ஒரு தாழ்வுடன் பார்க்கும் மாணவர்களை கண்டு நான் மனம் நொந்திருக்கிறேன். நான் பட்டப் படிப்பு படித்த காலத்தில் இதை மனதில் கொண்டு ஷூ முதலியவைகளை அணிவதை தவிர்த்தும் உள்ளேன் மேலும் ஒரு குடும்ப சூழ்நிலை எப்படி ஒருவனின் சிந்தனை திறனை பாதிக்கும் என்பதனை கல்வியின் மீது கலாசாரத்தின் பாதிப்புகள் என்ற தலைப்பில் பார்ப்போம்.

# நின் நிலை என்ன ?

இப்போது ஆசிரியர்களும் கல்வியும் எவ்வாறு இருக்கிறது என்பதைப்பார்ப்போம்.

## ஆசிரியர்களும் கல்வியும்

**கல்வியின் காவலனாக விளங்குபவர் ஆசிரியர்,** நம் நாட்டில் சமுதாயத்தில் இவர்களுக்கு அளிக்கப்படும் மதிப்பு இருக்கிறதே அது ஒன்றே போதும் எத்தனை புதிய கொள்கையை அறிவித்தாலும் சமுதாயம் சீரழிந்து போவதற்கு.

இந்த நாட்டில் ஓர் ரிசர்வ் பேங்க்பியூனுக்குசம்பளம்மாதம் இரண்டாயிரத்திற்கு மேல். ஆனால் ஒரு கல்லூரி ஆசிரியனுக்கு ஊதியம் ரூபா 1600/- குறைந்த பட்ச கல்வி தகுதி முதுகலை பட்டம் பெற்று, மேலே M.Phil. பட்டம் வாங்க வேண்டும். இதனால் ஆசிரியன் சம்பளத்தை பற்றி கேட்கவே வேண்டாம். இதனால் ஆசிரியர் தொழிலுக்கு யாரும் மன விருப்பத்தோடு செல்வதில்லை. எந்த வேலையும் கிடைக்காத பட்சத்தில், ஒதுங்கும் ஒரு அகதியின் புகலிடமாக ஆசிரியர் பணி இன்றைக்கு திகழ்கிறது. இதனால் சிந்திக்கவே சக்தியற்ற பலர் ஆசிரியர்களாக உள்ளனர். சிந்திக்கிறவர்கள் கணிசமாக இருந்தாலும் அவர்களுடைய பொருளாதார சூழ்நிலைகளால் மட்டுமல்லாமல் நமது நாட்டில் சுய சிந்தனைக்கு கிடைக்கின்ற மரியாதை கண்டும் சிந்திக்க மறந்து விடுகின்றனர்.

புதிய கல்வி கொள்கைப்பற்றி சில கருத்தரங்குகளில் பங்கு கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. ஒரு கருத்தரங்கில் கல்லூரி பேராசிரியர்களும் முதல்வர்களும் கலந்து கொண்டார்கள். அங்கே நான் ஒருவன் தான் குறைந்த கல்வி தகுதியும் குறைந்த பணியிலும் (பள்ளி ஆசிரியர்) ஈடுபட்டிருந்தவன். ஆனால் அங்கு அவர்கள் செய்த விவாதங்களைக்கேட்டு நான் தலையை பிய்த்துக் கொள்ளாத நிலைதான் போங்கள்.

ஒரு 55 வயதுநிறைந்த பேராசிரியர் கல்வி முன்னேற்றத்திற்காக கூறிய கருத்தை கேளுங்கள்:

'ஒரு ஆசிரியனுக்கு நாற்பது வயதில்தான் நல்ல மனவளர்ச்சியும் முதிர்ச்சியும் ஏற்படுகிறது. ஆனால் ஓய்வு பெறுவதோ 58 வயதில். ஆதலால் சரியாக தான்பெற்ற அத்தனை அறிவையும் போதிக்க

**ஜே. பி.**

முடியவில்லை. எனவே ஆசிரியர் ஓய்வு பெறுவதை அறுபதாக உயர்த்த வேண்டும்' என்று.

40 வயதில் முதிர்ச்சி வந்தாலும் 18 வருடங்கள் இருக்கின்றனவே இதில் போதிக்காத போதனையையா இரண்டு ஆண்டு காலத்தில் போதித்து விடபோகிறார்? நீங்களும் சிரிக்கலாம் ஆனால் நான் என்ன சிந்தித்தேன் தெரியுமா?

பாவம் அவருக்கு என்ன பிரச்சனையோ? கல்யாண வயதில் அவருக்கு எத்தனை பெண்களோ? ஓர் இரண்டு வருட பதவி நீடித்தால் அந்த வருமானத்தில் ஒரு பெண்ணுக்கு கஷ்டப்பட்டு கல்யாணத்தை முடித்து விடலாம் என்று அவர் மனம் சிந்தித்திருக்கும். கல்வித் திட்டத்திற்கு யோசனையாக அவர் தன் குறைபாட்டை சொல்லும் அளவுக்கு அவருடைய நிலைமை இருக்கிறது.

அந்த விவாதத்திற்கு தலைமை பொறுப்பேற்றிருந்த இன்னொரு வயதானவர்சொல்லுகிறார் பாருங்கள். ''நாம் ஆரம்ப கல்வியையோ, உயர் பள்ளிகல்வியையோ சீர்திருத்த அவசியமில்லை. கல்லூரி உயர் கல்வியை சீர்திருத்தத்தினால் அந்த சீர்திருத்த உயர் கல்வியை பெற்றவர்கள் ஆரம்ப கல்வியை சீர்திருத்தி விடுவார்கள்''என்று.எப்படியோசனை?

அவருக்கு என்ன குறையோ உயர்கல்வியை சீரமைத்தால் கல்லூரி பேராசிரியரான அவருக்கு சிறிது வருவாய் கூடுதலாகும் என்ற உந்துதலோ?

இப்போது நான் சொல்ல போகும் கருத்தை பலர் எதிர்க்கலாம். ஆம் பல வயதான ஆசிரியர்களை பற்றியது. கல்வியை திட்டமிடும் அதிகாரம் வயதானவருக்கு அளிக்கப்படுகிறது. ஆனால் இவர்கள் **அனுபவம் என்ற நொண்டி குதிரையின் மீது சவாரி செய்வதையே குறிக்கோளாக கொண்டுள்ளனர்.** அறிவை வளர்த்துக் கொள்ள சிறிதும் விரும்புவதில்லை. தனக்கு எல்லாம் தெரியும் என்ற இவர்களது மனப்போக்கு கல்வியை குழி தோண்டி புதைத்தே விட்டது. இன்றைக்கு M. A., M. Sc. போன்ற வகுப்புகளுக்கு போதிக்கும் வயதான பேராசிரியர்களை தேர்வு எழுதி M.A. M.Sc. பட்டம் பெற சொல்லுங்கள்? ஐம்பது சதவித ஆசிரியர்கள் தேறி விட்டால் நான் வாழ்க்கை முழுவதும் மொட்டையடித்து உலா வருகிறேன். பலர் பெட்டி கடையில்கணக்கு எழுதகூட தகுதியற்றவர்கள்.

எனக்கு M. Sc. வேதியல் போதித்த ஆசிரியர் ஒருவருக்கு தாமிரத்துக்குகுறியீடு(Symbol) தெரியவில்லை. அதே கல்லூரியின் கணித பேராசிரியருக்கு Sin 180 மதிப்பு தெரியவில்லை இவர்களெல்லாம் கூட்டம் போட்டு கல்வியை பற்றி விவாதிக்கிறார்கள். இன்னும் கொடுமை அந்த கலலூரி தன்னாட்சி (Autonomous) அதிகாரம் பெற்ற கல்லூரி, பாடத் திட்டத்தை நிர்ணயித்து கொள்ளும் உரிமை இந்தப்பேராசிரியர்களுக்குண்டு. அவர்கள் காலத்தில் எழுதிய நோட்சையே இப்போதும் படிக்கிறார்கள். எதுவும் போதிப்பதில்லை. **அறிவோடு கூடிய அனுபவத்திற்கு மிக்க மதிப்பு அளிக்க வேண்டும் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை.** ஆனால் வெறும் அனுபவம் ஒன்றை மட்டுமே ஆதாரமாக கொண்டவர்களுக்கு வாய்ப்பு அளிப்பது மடமை.

ஓர் நல்லாசிரியர் எப்படி இருக்க வேண்டும்? அவருடைய தகுதிகள் என்ன என்பதை பற்றிய என் கருத்துகளை கூறுகிறேன்.

1. ஆசிரியர் நல்ல சிந்தனை திறனும் எதையும் சரியாக எடை போட கூடிய திறனும் கொண்டவராக இருத்தல் அவசியம்.

சிந்தனை திறன் இருப்பவர் தான் கற்றவற்றை சீர் தூக்கி பார்த்து, அதன் சாதக பாதங்களை நன்கு அறிய முடியும். வெறுமனே புத்தக பூச்சியாக இருந்தால் போதாது?

2. கற்பனை வளம் மிக்கவராக இருத்தல் அவசியம். கற்பனை வளம் கொண்டவருக்குத்தான் சரியான எடுத்துக் காட்டுகளை கூறி பாடத்தை விளக்க முடியும்.

3. நல்ல மனப்பக்குவம் மற்றும் போதுமான உளவியல் அறிவு வேண்டும். ஆசிரியன் கையில் வருங்கால சமுதாயம் ஒப்படைக்கப்படுகிறது. அதை அவன் வார்த்தெடுக்க வேண்டும். வாழ்க்கையில் விரக்தி அடைந்தவர். நல்ல மனபக்குவம் இல்லாதவர்கள் பலர் இன்று ஆசிரியர் பணியில் இருப்பதை காணும் போது

(11-ம் பக்கம் பார்க்க)

# வாசகர்கள் எழுதுகிறார்கள்

## கர்நாடக பால்மரக் காட்டில்

மக்கள் மறுவாழ்வு ஜூன் மாத இதழ் கிடைத்தது. நன்றி. அவ்விதழில் ''கர்நாடகா பால் மரக்காட்டில்'' என்ற தொடர் கட்டுரையில், பக்கம் எட்டு. பத்தி இரண்டில்,

''முதன் முதலில் சாவுக்கு உதவிசெய்யும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டது சாரதா கலா மன்றம். யாரும் மரண மடைந்தால் சவக்குழி வெட்டிக் கொடுத்தல் போன்ற உதவிகள் செய்யப்பட்டது.''

என்று குறிப்பிடப் பட்டக் கருத்து முற்றிலும் தவறு. சாரதா கலா மன்றம் ஆரம்பிக்கப் பட்டதின் நோக்கமே தமிழர்களின் கலை, கலாச்சாரம், கல்வி, மற்றும் பொதுநலச் சேவை செய்தலுமே ஆகும். அதில் ஓர் அங்கமே சாவுக்கு இலவசமாக சவக்குழி, மன்ற இளைஞர்களால் தோண்டுவதும் ஈமக்கிரிகைகளில் பங்கேற்று உதவிபுரிவதுமாகும்.

மேலும் அதே பகுதியில் 'கோவில் கமிட்டிகள் உருவாக்கப்பட்டு அதன் உதவியால் விளையாட்டுச் சங்கங்கள் அமைய துணையாகஇருந்தது'' என்பதும் தவறு.

உண்மையில் விளையாட்டுத் துறையில் ஆர்வமுள்ள பல இளைஞர்களால் ஆரம்பிக்கப் பட்டதே இவ்விளையாட்டுச் சங்கம். இன்று பரவி புகழ் பெற்று பல இளைஞர்களை விளையாட்டில் வட்ட மாவட்ட மாநில அளவில் பங்கேற்கச் செய்துள்ளது. இதற்கு உறுதுணையாக தொழிற் சங்கங்களும் விளையாட்டு உபகரணங்களை இலவசமாக கொடுத்துதவிய ரப்பர் கூட்டுறவு ஸ்தாபனம் (K.F.H.C Ltd) மும் இளைஞர்களில் விளையாட்டுத் துறையில் உதவி புரிந்தமை இன்றியமையாதது. அது மட்டுமல்லாமல் இளைஞர்களின் ஆர்வத்தைக் கண்ணுற்ற நிர்வாகம் அவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் நிர்வாக வருடவிழாவில் முக்கியமாக விளையாட்டு நிகழ்ச்சிகள் ஏற்படுத்தி வருகின்றது என்பது குறிப்பிடத் தக்கது.

கர்நாடகாவின் ஓர் ஒதுக்குப் புறமாக ஒதுங்கிக்கிடந்த இலங்கைக் குடிபெயர்ந்தோர் மறுவாழ்வு திட்டத்தை 'பால் மரக் காட்டினிலே'' என்ற தொடர் கட்டுரையின் மூலம் வெளி உலகிற்கு இருளில் மூழ்கிக்கிடந்த தாயகம் திரும்பிய மக்களை தெரியத்தந்த மக்கள் மறுவாழ்வு இதழுக்கும் ஆசிரியருக்கும் நன்றிகள்.

**நாராயணசாமி**

செயலர்
சாரதா கலா மன்றம்
சோனன்கேரி
கர்னாடகம்

## எது சரி ?

ஜூன் மாத 'மக்கள் மறுவாழ்வி'ல் பெங்களூரை 'பங்களூர்' என்று ஆக்கியுள்ளீர்கள். நீங்கள் மட்டுமல்ல; தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் குமுதம் போன்ற பல பத்திரிகைகளும் இந்தத் தவறைத் தொடர்கின்றன.

'பெந்தகா (Boiled beans) + ஊரு, என்றிருந்தது தான் பிற்காலத்தில் 'Bengaturu' என்று பரிணமித்தது. இப்பெயர் 16-ஆம் நூற்றாண்டில் இப்பகுதியை ஆண்டு வந்த ஹொய்ஸல மன்னர்களால் சூட்டப்பட்டது என்பதுதான் வரலாறு. ஆக தமிழில் எழுதினாலும் சரி; ஆங்கிலத்தில் எழுதினாலும் சரி பெங்களூர் என்பதுதான் முற்றிலும் சரியானது.

மக்கள் மறுவாழ்வைத் தொடர்ந்து படித்து வருகிறேன். மக்கள் மறுவாழ்வு பெயருக்கும் இதழில் வரும் விஷயங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டும்.

**முகமது இஸ்மாயில்**
பெங்களூர்-8.

❋

## துணிச்சலோடு சொல்கிறீர்கள் !

பர்மாவிலும் இலங்கையிலும் இருந்து தாயகம் திரும்பியுள்ள அனைத்துத் தமிழ் மக்களின் அளவிலா துயரங்களையும் மறுவாழ்வுத் துறையின் சகல நடவடிக்கைகளை துணிச்சலோடு எடுத்துக் காட்டி தமிழ் மக்களின் உள்ளத்தில் நிலைத்தும் நிற்கும், மக்கள் மறுவாழ்வு மாத இதழுக்கும் இதைத் தொடர்ந்து நடத்தி வருகிறவர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

**எஸ்,இராஜரத்தினம்**
திருச்சி-19

❋

## சேவை தொடர வேண்டும்!

மக்கள் மறுவாழ்வு சேவையினால் பயனடைந்து வந்த நாங்கள் அனுப்பிய கடிதங்களுக்கு பதிலோ பத்திரிகையில் பிரசுரமாகவோ இல்லை தங்கள் பத்திரிகையை முதலில் அறிமுகம் செய்த திரு. அருள் அண்டனி அவர்களுக்கு எமது முகாமில் கண்ணீர் அஞ்சலி செலுத்தினோம். அவர் மூலமாக எங்கள் பிரச்சனைகள் தங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு வந்தன. தொடர்ந்து தங்களின் சேவை எங்கள் முகாமில் தொடரவேண்டும்.

**எம். மாயவன்**

அகதிகள் முகாம்
அய்யம்பேட்டை
கடலூர்.


## ஐந்தாவது ஆண்டு மலர்

அதிக பக்கங்களோடு
வெளிவரவிருக்கிறது

மலையக மக்களின்
வரலாறு
வாழ்க்கை,
சமூக,
கலை
இலக்கியம்

மற்றும்

தாயகம் திரும்பியோர்
பிரச்சனைகள்
குறித்தும்

பலர்
எழுதுகிறார்கள்

விபரங்களுக்கு:

மக்கள் மறுவாழ்வு
அஞ்சல் பெட்டி எண்: 5560
சென்னை-600 094

## செய்திக் குறிப்புக்கு மறுப்பு :

# நாடற்றவர்கள் எவ்வளவு பேர்?

மக்கள் மறுவாழ்வு ஜூலை இதழில், நாடற்றவர்கள் எவ்வளவு பேர் என மகுடமிட்டு "சிலோன் டுடே" என்ற சஞ்சிகையிலிருந்து பெறப்பட்டு வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் காணப்படுகிற நாடற்றவர் பற்றிய மதிப்பீடு, தவறானதும் அபத்தமானதாகும். அக் குறிப்பிலே, நாடற்றவர்கள் 681,298 பேர் என கணக்கிடப்பட்டுள்ளமை உண்மைக்கு புறம்பானதும், தவறான முடிவுகளுக்கு இட்டுச் செல்லக் கூடியதாகும்.

கணிப்பீட்டினை கவனிக்கு முன்னர் யார் நாடற்றவர்கள் என்பதில் ஒரு தெளிவு இருக்க வேண்டும் இலங்கை அரசோ, இந்திய அரசோ பொறுப்பேற்காமல்— அதாவது குடியுரிமை வழங்கி தன்னுடைய பிரஜைகளாக்கி கொள்ளாத ஒரு நிலையில் உள்ளவர்களே நாடற்றவர்கள் 1954ம் ஆண்டிற்கும் 1964 ஆம் ஆண்டிற்கும், இடையில் இந்த நிலை இலங்கை வாழ் இந்திய வம்சா வழியினருக்கு வந்து சேர்ந்தது 1964ம் ஆண்டு சிரிமா சாஸ்திரி ஒப்பந்தம், 1974ம் ஆண்டு சிரிமா-இந்திரா ஒப்பந்தம், 1986ம் ஆண்டு ஒப்பந்தம் இன்னும் நடைமுறைக்கு வராத நிலையில், நாடற்றோர் எவ்வளவு பேர் என கணக்கிட்டு கொள்வது பொருத்தமான ஒன்றே.

செய்திக் குறிப்பில் சுட்டிக் காட்டியுள்ளபடி, 1964ம் ஆண்டு தோராயமாக கணக்கிடப்பட்ட நாடற்றோர் தொகை 975,000 ஆகும் இந்த தொகை 1964ம் 1974ம் ஆண்டு ஒப்பந்தங்களின்படி இந்தியாவுக்கு 6 இலட்சம் எனவும், இலங்கைக்கு 375,000 எனவும் பங்கிடப் பட்டது. இந்த ஒப்பந்தங்கள் சரிவர நடைமுறைப் படுத்தாத நிலையில், இந்தியாவுக்கு 5 இலட்சத்து 6 ஆயிரம் விண்ணப்பங்களே கிடைக்கப் பெற்ற நிலையில், 1986ல் ஆண்டு ஒப்பந்தப்படி, இலங்கை 94,000 பேரை - தன்னுடைய நாட்டவராக்க ஏற்றுக் கொண்டது. எனவே, இந்தியாவின் கோட்டா 6 இலட்சத்திலிருந்து, 5 இலட்சத்து 6 ஆயிரமாகக் குறைய இலங்கையின் தொகை 4 இலட்சத்து 69, ஆயிரமாக கூடியுள்ளது 1986ம் ஆண்டளவில் இந்தியா 421, 207 பேருக்கு பிரஜா உரிமை வழங்கி, 3,31,000 பேரை, அவர்களுடைய இயற்கை அதிகரிப்புடன், தன்னுடைய நாட்டிற்கு வரவழைத்து கொண்டது ஆகவே, இந்திய தரப்பில் இன்னும் பிரஜா உரிமை வழங்கப்பட வேண்டியவர்கள், ஏறக்குறைய 85,000 பேராகும் (5 06.000-420, 000) இதே போல இலங்கை தரப்பில் 197,535 பேருக்கு பிரஜா உரிமை வழங்கப்பட்டுள்ளது எனவே இன்னும், இலங்கை பிரஜா உரிமைவழங்கப்பட வேண்டியவர்கள் தாம், நாடற்றவர்கள் என எடுத்துக் கொண்டால் அந்த தொகை 356, 465 ஆகும். (85,000+271 465) இத்தோடு ஒரு 30 சத வீத இயற்கை அதிகரிப்பான 106,939ஐயும் சேர்த்துக் கொண்டதால் இந்த தொகை 463,404ஆகவே அமையும்.

ஆனால், செய்திக் குறிப்பில் ஆச்சரியப்படத்தக்க வகையில் மதிப்பிடப்பட்ட தொகை, 681,298 ஆகும். இந்த இரண்டிற்கும் இடையில் இத்தகைய வித்தியாசம் ஏன் ஏற்பட்டது? இப்பாரதூரமான பிழை எங்கு ஏற்பட்டது? என்ற கேள்விகள் பிறக்கின்றன,

கணிப்பீட்டிலே 2 பாரிய பிழைகள் விடப்பட்டுள்ளன முதலாவது இலங்கை தரப்பில் 1986ல் 94,000 பேரை சேர்த்த பொழுது இந்திய தரப்பில் இந்தஎண்ணிக்கைகுறைக் கப்பட்டிருக்க வேண்டும். இது செய்யப்பட வில்லை. செய்திக் குறிப்பில் 'இ' என குறிப்பிடப் பட்டுள்ள 93,793 தொகையே இப்படி பிழையாக கூட்டப்பட்டுள்ளது. இரண்டாவது பிழை மிகப்பாரதூரமானதும், 1964-1986 காலப் பகுதியில் 30% இயற்கை அதிகரிப்பு, 325 ஆயிரம் பேர் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவும் தவறானதாகும் 975ஆயிரம் பேருக்கு 30 சத விகிதம் அதிகரிப்பு, 292,500 ஆகும் இந்த கணக்குப்பிழையை நாம் அவ்வளவு பொருட்படுத்த வேண்டியதில்லை. ஆனால் இந்திய குடி உரிமைப் பெற்று, தாயகம் திரும்பிய 331 ஆயிரம் பேருக்கும் சேர்த்து கணக்கிட்டிருப்பது மடமையான ஒன்றாகும். உண்மையில் இந்திய பிரஜா உரிமை பெற்ற 421 ஆயிரம் பேரையும் இலங்கை பிரஜா உரிமை பெற்ற 197,535பேரையும் இக் கணிப்பீட்டிலே சேர்க்க கூடாது. இவர்களை ஆரம்ப நாடற்றோர் தொகை 975 ஆயிரம் பேரில் நீக்கி விட்டால் 326,465 பேரே மிஞ்சுவர். இவர்களின் இயற்கை அதிகரிப்பு 30 சதவிகிதக்கதை சேர்த்துக்கொண்டால், தற்போதைய நாடற்றோர் எண்ணிக்கையை பெற்றுக் கொள்ளலாம். சுருக்கக் கூறின்,

1. இலங்கை பிரஜா உரிமை பெற இருப்போர் 271,465
2. இந்திய பிரஜா உரிமை பெற இருப்போர் 85,000

   மொத்தம்(1+2) 356 465

3. 30% அதிகரிப்பு (1+2ன்) மொத்தத்தில் 106,939

   ஆக 463,404

உண்மையான கணிப்பீடு, இப்படி எளிதானதாக அமைந்திருக்கும்போது, ஏனிந்த பிழைகள் மலிந்த அபத்தமான கணிப்பீடு?

—எம். வாமதேவன்

# சித்தார்த்த புத்திரர்கள்

## வண்ணச்சிறகு

அந்த தெருவில்
முதலில்
ஒரு நாய்
சில மனிதர்கள்
சில கட்டிடங்கள்
சில பொருட்கள்
எரிந்து போயின

அப்போதும்,
சித்தார்த்த புத்திரர்கள்
சீற்றம் தணியவில்லை.
தெரு முழுதும்
தீ மேவியது.

மானுட நாகரீகம்
வலைந்த மாதிரி
இரும்புக் கம்பிகள்
வலைந்து போயின.

இனி
புகைய முடியாத
உடல்களைப் போல
கட்டிடங்கள்
புகைந்து போயின

என் முன்னால்
எல்லாமே
எரிந்து போயிற்று
நாகரீகம் உட்பட
ஏன்?
நான் உட்பட.

# வரப் பெற்றோம்

## பகலில் ஒரு சுதந்திரம்

கவிதை தொகுதி

ஆசிரியர்:
**ராம சூரியன்**

வெளியீடு:

**பாரதி பதிப்பகம்**
108, உஸ்மான் சாலை,
தியாகராய நகர்,
சென்னை-17

விலை: ரூபா 5

எனது தேசத்தில் நிஜங்கள் கண்ணீர்க்குடம் சுமக்க, பொய்களே மகுடம் சுமக்கின்றன. ஆதலால் எழுத்துக் கோலை ஏந்தியுள்ளேன் எனது கவிதைகள் ரசிகர்களை உருவாக்க அல்ல ராணுவ வீரர்களை உருவாக்கவே என்று கூறிக் கொண்டு புதுக்கவிதை புனையத் தொடங்கியிருக்கும் இளங் கவிஞர் ராம சூரியனின் புதுக் கவிதை தொகுதி, 'பகலில் ஒரு சுதந்திரம்'.

புதிய கவிஞராக இளைய கவிஞராக இருந்தாலும் புதுக்கவிதை இவருக்கு லாவகமாக வருகிறது. நறுக்குத்தெறிக்க நான்கு வார்த்தைகளில் சொல்லுகிற புதுக்கவிதைப் பாங்கு இவர் கவிதைகளில் தெரிகிறது.

சொல்லாட்சியும் பாராட்டத் தக்கது.

சமூகத்திலுள்ள வறுமையும், கொடுமைகளையும் இழிவுகளை சாடுகிறார். அரசியல் வாதிகளையும் அரசையும் தனதுகவிதைக் கத்தி கொண்டு கிழித்துக் காட்டுகிறார்.

'வியாபாரியின்
இதழும்
விபச்சாரியின்
விழியும்
கலந்தது தான்
அரசியல் வாதியின்
இதயமோ'

என்று அரசியல்வாதிகளை இனங்காட்டுகிறார்.

சமூகத்தைப் பார்த்து விரக்தியுறும் இவர்

'பறக்குது... பறக்குது
பலவண்ணக் கொடிகள்
பசிக்குது பசிக்குது பரிதாபக்
குரல்கள்
வியர்க்குது வியர்க்குது துடிக்
குது விரல்கள்
விழித்திரு விழித்திரு காண்
போம் விடைகள்'

என்று இராணுவ வீரர்களையும் உருவாக்கத்துடிக்கிறார்.

இவர் இளங்கவிஞரல்லவா?
'நம் உடல்களை
சிலுவையில்
அடித்தாலும்
நம் உள்ளங்களுக்கு
சிறகுகள் முளைப்பது
அவர்களுக்கு தெரியாது'

என்று காதல் சிறகடித்தும் பறக்கிறார்-இத் தொகுதியில் காதல் கவிதைகளே நிறைய சிறகடித்து பறக்கின்றன.

குழந்தைகள் விடுகதை, புதிர் போடுவது போல வார்த்தைகளை புனைந்து புதுக் கவிதைகள் என்று பலர் இன்று எழுதுவதை பத்திரிகை, சஞ்சிகைகளில் காண்கிறோம் இத்தொகுயில் இரண்டொரு கவிதைகள் இதுபோன்று இருப்பதை பார்க்காமல் இருக்க முடியவில்லை.

கவிதை எழுத வரப் பெற்ற இவரது கவிதைகளில் இவரது எதிர்காலம் பிரகாசமாகவே தெரிகிறது. ஆயினும் இவரது இலக்கு, எண்ணங்கள் என்ன என்பதில் இவர் தடுமாறுவதை காணக்கூடியதாக இருக்கிறது

புதுக்கவிஞராக இவர் கவிதை புனையும் ஆற்றல் உள்ள இவர் வளர வேண்டியவர். வாழ்த்தி வளர வைக்க வேண்டியவர்- இவரது தொகுதியை வாசித்துப் பார்க்கும் போது ரசிக்கவே செய்கிறது.

O

## வாழ்வியல்

(குறட்பாக்கள்)

ஆசிரியர்:
**வெண்பா வீராசாமி**

வெளியீடு

சிந்தனையாளர் பதிப்பகம்,
59 இலெனின் தெரு,
குலசேகரபுரம்,
சென்னை-111

விலை ரூபா 10.

சமூகம் எப்படி இருக்க வேண்டும்; சமூக மாந்தர் எப்படி வாழவேண்டும்; சமூக அமைதிக்கும் வாழ்வின் வளர்ச்சிக்கும் என்ன தேவை என்பது குறித்து சிந்திப்பது வாழ்வியல்.

சிந்திக்கத் தூண்டும் கருத்துகளை குறட்பாக்களில் யாத்துத் தந்திருக்கிறார் ஆசிரியர். குறட்பாக்களுக்கு விளக்க வுரையும் வழங்கி இருக்கிறார்.

இயற்கை, மண், மழை, ஏர் உழைப்பு பொருள் உடைமை, பொதுமை, அரசு என்று ஒவ்வொரு பொருள் பற்றியும் சிந்தித்து அரிய கருத்துகளை குறட்பாக்களில் தந்துள்ளார்.

குறட்பாக்களின் இவர் சொற்சிலம்பம் ஆடுகிறார். கருத்துகளை சொல்லும் விதமும், சொற்களை ஆளும் திறனும் இவர் வெண்பாவில் புலி தான் என நிரூபிக்கிறது.

படித்து, அறிவை வளர்க்க இது சிறந்த நூலாகும்.

O

## ஈழப் போராளிகளின் சிந்தனைக்கு....

ஆசிரியர்
**எரிதழல்**

வெளியீடு:

**தோழமை**
20, கோதண்டபாணி தெரு,
குடந்தை 612101

விலை: ரூபா 1

ஈழ விடுதலை இயக்கங்களில் இன்றுள்ள போக்கையும், நடவடிக்கைகளையும் சுட்டிக்காட்டும் சிறு துண்டுப்பிரசுரமிது.,

ஈழவிடுதலை இயக்கங்களின் இராணுவ நடவடிக்கையையும் முன் தளத்தில் விடுதலை இராணுவத்திற்கும் மக்களுக்கும் இருக்கும் இடைவெளியையும், பின் தளத்தில் போராளிகளுக்கும் மக்களுக்குமுள்ள இடைவெளியையும், இயக்கங்களுக்குள்ள தனி நபர் வாதம், முரண்படுகிறவர்களை பழி வாங்கும் போக்கு முதலானவற்றையும், இப்பிரசுரம் விமர்சிப்பதோடு, இயக்கங்கள் தங்கள் தவறுகளை திருத்திக்கொண்டு உடனடியாக எடுக்க வேண்டிய செயல்பாடுகள், நடவடிக்கைகுறித்தும் எடுத்தியம்பியுள்ளது.

O

## சாதி மதங்களும் புதிய சனநாயகப் புரட்சியும்

ஆசிரியர்:
அ. மார்க்ஸ்

வெளியீடு
தோழமை.

இலங்கை எழுத்தாளர் கே. டானியலின் 'கானல்' நாவலுக்காக எழுதப்பட்ட முன்னுரை சிறு பிரசுரமாக வெளியிடப்பட்டுள்ளது.

வரலாற்றுப் போக்கில் சாதியம் வளர்ந்த விதம் குறித்தும், இந்தியாவில் சாதி முறை, புதிய ஜனநாயகப் புரட்சியில் சாதி ஒழிப்பு நடவடிக்கை குறித்தும் சுருக்கமாக விளக்கியுள்ளார் இதன் ஆசிரியர்,

O

## முகம்-

ஆசிரியர்:
**புகழேந்தி—**

முகவரி:
18, 68 வது தெரு
11 வது பிரிவு
கருணாநிதி நகர்
சென்னை-78

கதை, கவிதை, துணுக்குகள் நிறைந்த இலக்கிய மாத இதழே முகம். O

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வேதனை ஏற்படுகிறது. தங்களுடைய மன விரக்தியை குடும்ப சூழலின் சீற்றத்தை மாணவர்களை அடித்து தீர்த்துக்கொள்ளும் ஆசிரியர்களை நான் கண்டிருக்கிறேன். ஆசிரியனுடைய தகாத கவனிப்பால் பாழ்பட்ட மாணவர்கள் பலரை நான் அறிந்திருக்கிறேன். மாணவர்களிடம் எப்படி நடந்துகொள்வது என்று தெரியாத காரணத்தால் தவிக்கும் உண்மையிலே நல்ல மனிதர்கள் ஆசிரியர் பணியில் உள்ளனர். எனவே உளவியல் அறிவு அத்தியாவசியமானது. (BEdல் உளவியல் பாடம் உண்டு என்று சிலர் கூறலாம். பரீட்சை தேற மட்டும்தான் அது பயன்படும்.)

மிக சிறந்த மக்கள் தொடர்பாளனாக ஆசிரியன் இருக்க வேண்டும். சொல்ல நினைத்தவற்றை தெளிவுற சொல்லும் திறன் ஆசிரியனுக்கு அவசியம். சில ஆசிரியர்கள் மிக புத்தி கூர்மை உடையவர்களாக இருப்பார்கள். ஆனால் தெளிவுற போதிக்கும் திறன் அற்றவர்களாக இருப்பார்கள். எனவே அவர்களுடைய அறிவு ஆசிரிய தொழிலில் பயனற்றுப் போகிறது.

(அடுத்த இதழில் முடியும்)

# மக்கள் மறுவாழ்வு மன்றக் கிளைகள்

கோத்தகிரி, கர்சன்வேலி அரசினர் தேயிலைத்தோட்டத்தில் மக்கள் மறுவாழ்வு மன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

பின் வருவோர் நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. பி. சந்தானம், துணைத்தலைவர்: திரு. எஸ். மூர்த்தி; செயலாளர். திரு. பி. செல்வநாதன், துணைச்செயலாளர்: திரு.என் தர்மராஜ், பொருளாளர்: திரு. ஏ இராமசாமி.

செயற்குழு உறுப்பினர்கள் : திருவாளர்கள் சிவாஜி கணேசன், ராஜேந்திரன், முருகேசன், பாலகிருஷ்ணன். குமார். மயில்வாகனம், சக்திவேல், மனோகரன், கந்தையா, எம். குமார் ஆகியோர்கள்.

## கட்டுபெட்டு பாரதிநகர்

கோத்தகிரி கட்டுபெட்டு, பாரதிநகரில் மக்கள் மறுவாழ்வு மன்றம் அமைக்கப்பட்டுள்ளது பின் வருவோர் நிர்வாகிகளாக தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

தலைவர்; திரு. என். கே. பத்மநாதன் துணைத்தலைவர் திரு. ஆர். வேவாயுக்ம் செயலாளர்; திரு. எம். பழனிவேல் துணைச்செயலாளர் திரு. ஆர் கோவிந்தன், பொருளாளர் : திரு எஸ். ராஜு.

செயற்குழு உறுபபினர்கள் : திருவாளரகள் ஆர். ஜெயராம் ஆர் ஏசையன், டி, ரெங்கசாமி எம்.கே. பெருமாள், வி. கிருஷ்ணன், என். அருணாசலம், எம். கோபால். O

## ஈ. பா க. கூட்டம்

ஈழத் தமிழர் பாதுகாப்புக் கழகத்தில் 3வது மாதாந்தக் கருத்தரங்கு26-7-1986அன்று சென்னை மகா ஜன சபா மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு இலங்கைமுன்னால நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தங்கத்துரை தலைமை தாங்கினர் O

# கொடைகானலில் அனைத்து தொழிலாளர் கூட்டம்

அண்ணா மாவட்டம், கொடைக்கானல் 20-7-86 அன்று கொத்தடிமைவிடுதலை முன்னணியும், கொடைக்கானல் ஐக்கிய தொழிலாளர் சங்கமும் இணைந்து பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தியது. இக் கூட்டத்தில் ஆண்களும்பெண்களுமாக சுமார் 1000 பேர் கலந்துக் கொண்டனர். கூப்பில் வசிக்கும் தொழிலாளர்கள் மட்டுமல்லாது, இதர தொழிலாளர்களும் கலந்துக் கொண்டு தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு ஒட்டு மொத்தமாக குரல் கொடுத்தனர்.

இப் பொதுக்கூட்டத்திற்கு தமிழ்நாடு கொத்தடிமை விடுதலை முன்னணி அமைப்பாளர் வழக்கறிஞர் சத்தியமூர்த்தி அவர்கள் தலைமைத் தாங்க, முன்னணித் தலைவர் திரு சுவாமி அக்னிவேஷ், திரு ஹென்றி(PUCL), திரு டி என். கோபாலன் (நிருபர், இந்தியன் எக்ஸ்பிரஸ்) திரு ஜான் பீட்டர் (த க.தொ சங்கம்), திருமதி எஃப். எம் செல்வி (மாதர் சங்கம், கொடைக்கானல்) திரு காதர்(குதிரை ஓட்டுநர் சங்கம்) திரு K. K. காமு(வழி காட்டுநர் சங்கம்) திரு ரவி(சிராக்), திரு காளிமுத்து, திரு M. ஆசீர் (சுமை தூக்கும் தொழிலாளர் சங்கம்) மற்றும் தனுஷ் கோடி, பாதர் ஆரோக்கியசாமி ஆகியோர் பேசினார்கள். O

# இனப்படுகொலையை கண்டித்து மண்டபத்தில் மவுன ஊர்வலம்

மண்டபம் முகாமில் அகதிகள் இலங்கையில் நடக்கும் இன படுகொலையை கண்டித்து மௌன ஊர்வலம் நடத்தினர்.

இலங்கையில் 1983ம் ஆண்டு ஜூலைமாதம் வெளிக்கடை சிறையில் படுகொலை செய்யப் பட்ட ஈழபோராளிகளுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவும் இலங்கையில் தொடர்ந்து தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை கண்டித்தும் ஈழத்தமிழர்கள் பிரச்சனையை மத்திய மாநில அரசுகள் உடனடி நடவடிக்கை எடுத்துதீர்க்கக்கோரியும்மண்டபம்முகாமில் தங்கியுள்ள அகதிகள் மௌன ஊர்வலம் நடத்தினர்.

இந்த மௌன ஊர்வலம் வி. தர்மலிங்கம் தலைமையில் இளைஞர்கள் யுவதிகள் சிறுவர்கள் மூவாயிரம் பேர்கள் கலந்து கொண்டனர். ஊர்வலத்தை வணபிதா சூசை மாணிக்கம் அவர்கள் ஆரம்பித்துவைத்தார். சுலோக அட்டைகளை ஏந்திய ஆண்களும் பெண்களும் மௌனமாக மண்டபம் முகாம்தனித்துணை ஆட்சியர் அலுலகம் முன்புள்ள பிரதான நுழைவாயிலை அடைந்தனர்.

மௌன ஊர்வல முடிவில் மகேந்திரன். ரெக்ஸ் குவாஸ். எஸ். எட்மன், வி. தர்மலிங்கம் ஆகியோர் தமிழ் ஈழ விடுதலை பற்றி உருக்கமாக பேசினார்கள் மௌன ஊர்வலத்தில் கலந்து கொண்ட தாயகம் திரும்பியோர் ஐக்கிய முன்னணி சம்மேளனத்தின் மாவட்ட செயலாளர் டாக்டர். அம்மை. சொர்ணமணி சிறப்புரை ஆற்றினார். ஈழமக்கள் சகாய அன்னை மன்றத்தினர் விடுதலை புரட்சிபாடல்களை பாடினார்கள். கிரகரி. பாக்கியராசா நன்றி கூறினார். O

Editor & Publisher: T.S. RAJU, 1, South Gangai amman koil 2nd Street, Madras-600094. Printed: L. S. Srinivasan at Jai Kalidas Press, 29, B. E. Colony, 4th Street, Madras-24.

Regd. No. R. N. 42556/83 Regd. No. TN MS (C) 702 MAKKAL MARUVAZHVOO

தாயகம் திரும்பியோரின் வழிகாட்டி

மக்கள் மறுவாழ்வு

தொடர்பு முகவரி :
அஞ்சல் பை எண். 5560
சென்னை-600094

# இலங்கைத்தமிழர்பிரச்சனை: பேச்சுவார்த்தைதொடர்கிறது

இலங்கை அரசு அளித்துள்ள புதிய பிரேரணைக் குறித்து பேச்சு வார்த்தை தொடர்கிறது. பல்வேறு பட்ட கருத்து சாதகமாகவும் பாதகமாகவும் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

இலங்கை அரசுக்கும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்குழுவுக்கும் நடந்த பேச்சு வார்த்தையில் சில விஷயங்களில் உடன்பாடு ஏற்பட்டிருப்பதாக த.ஐ.வி.மு செயலாளர் திரு அமிர்தலிங்கம் தெரிவித்திருக்கிறார்.

இந்த பேச்சு வார்த்தை குறித்து "நாங்கள் நம்பிக்கையுடனும் இல்லை; மன அதைரியப்படவும் இல்லை" என்று த.ஐ.வி.மு. தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் நடந்த அனைத்துக்கட்சிக் கூட்டத்தில், இலங்கை இனப்பிரச்சனைக்கு தீர்வு காண மாற்றுத் திட்டம் தருமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை ஈழ விடுதலை இயக்கங்கள் நிராகரித்து விட்டன.

அண்மையில் தமிழர் விடுதலை கூட்டணி ஈழத்திற்கு பதிலாக மாற்றுத்திட்டம் ஒன்றினை மத்திய அரசுக்கு தயாரித்துக் கொடுத்திருந்தது. ஆனால் இத்திட்டத்தை இலங்கை நிராகரித்து விட்டது. இந்த நிலையில் விடுதலைக்கு போராடும் இயக்கங்களை மாற்றுத் திட்டங்கள் தயாரித்து தரும்படி கேட்பது கேலிக்கூத்தாகும் என்று ஈழ தேசிய விடுதலை முன்னணி தெரிவித்திருக்கிறது

1970ம் ஆண்டிற்குப் பின்னர் விடுதலை இயக்கங்கள் பேச்சு வார்த்தை பாதையை நிராகரித்து 'ஈழம்' என்ற இலக்கினை வைத்து அதற்கான போராட்டப் பாதையை வகுத்து ஆயுதம் தாங்கி போராடி வருகின்றன. எனவே தமிழர் பிரச்சினை தீர்வு காண திட்டம் எதுவும் இந்த இயக்கங்களால் முன் வைக்க முடியாது. அப்படி வைப்பதாக இருந்தால் அது ஈழம் குறித்ததாக இருக்கும் தமிழர் பிரச்சனையை உருவாக்கிய சிங்களவர் அரசுகளே. அதற்கான தீர்வையும் காண வேண்டியது சிங்கள அரசாங்கமே" என்று தனது தரப்பில் தெரிவித்திருக்கிறது.

## படுகொலை தொடர்கிறது

புதிய பிரேரணைக் குறித்து சமரச பேச்சு வார்த்தைதொடர்கிறது; இலங்கையில் சர்வ கட்சிகளும் கூடி பேசுகின்றன.

இந்த பேச்சு வார்த்தைகள் தொடரும்போதே இராணுவப் படு கொலைகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இராணுவத்தினர் மட்டுமல்ல; சிங்கள வெறியர்களும் அப்பாவித் தமிழர்களை - குழந்தை பெண்கள் உட்பட!- கொன்று குவித்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

இந்த பேச்சு வார்த்தையின் போது பல நூறு தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். வீடுகள் கடைகள் தீக்கிரையாக்கப்பட்டன; நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

## ஈ. தே. வி. மு நிராகரிப்பு

தங்களுடன் பேச்சுவார்த்தைக்கு வருமாறு தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி அழைத்த அமைப்பை ஈழ தேசிய விடுதலை முன்னணி நிராகரித்து விட்டது. 'பேச்சு வார்த்தை மூலம் எந்த தீர்வும் ஏற்படப் போவதில்லை' என்று ஈ.தே.வி,மு. தெரிவித்துள்ளது.

## விடுதலை புலிகள் சந்திப்பு

இலங்கை அரசுடன் நடத்திய பேச்சு வார்த்தைகள் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணித் தலைவர்கள் சந்தித்து பேசியுள்ளது,

## மீண்டும் பேச்சு வார்த்தை

தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணித் தலைவர்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே இரண்டாவது சுற்றுப் பேச்சுகள் மீண்டும் ஆகஸ்ட் 16ந் தேதி கொழும்பில் ஆரம்பமாகலாம் என்று பத்திரிகை செய்திகள் கூறுகின்றன.

பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து இன்னும் இரண்டு மாதங்களில் தமிழர் பிரச்சனைக்கு தீர்வு ஏற்படும் என இலங்கை ஜனாதிபதி ஜயவர்த்தனா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## மலையகத்தில் கலவரம்

இலங்கையில், மலையகத்தில் நுவரெலியா, தலவாக்கொல்லை ஆகிய பகுதிகளில் கடந்த ஜூலை 2ந் தேதி சிங்களக்குண்டர்களால் 44 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

பாதுகாப்பு படையினர் தமிழர் ஒருவரை கைதி செய்ததை தொடர்ந்து சுமார் மூவாயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ததை தொடர்ந்து இந்த தாக்குதல் நடந்துள்ளது.

தொடர்ந்து 2ம் நாளாக 3ந் தேதி சிங்கள வெறியர்கள் தாக்கியதில் 35 வீடுகளும், 28 கடைகளும் தீக்கியரையாக்கப்பட்டன.

இத்தாக்குதலில் 300 குடும்பங்கள் வீடிழந்துள்ளதாக தமிழீழ விடுதலை புலிகள் இயக்கம் ஒரு தகவலை தெரிவித்துள்ளது.

சந்தேகத்தின் பேரில் போலீசாரார் பூண்டுலோயா பகுதியில் 5 இளைஞர்கள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து 500 தமிழ்த் தொழிலாளர்கள் கத்தி அரிவாளுடன் ஆர்ப்பாட்டம் நடத்தியதைத் தொடர்ந்து அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்

5 பேர் சென்ற காரொன்றும் தீக்ரையாக்கப்பட்டதில் அவர்கள் தீக்காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளன. O